முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1193

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.01.2023, புதன்கிழமை

1. பார்காக்க வந்த வள்ளலே
   பரம ஆனந்த சதா சிவ சற்குருவே
   பாருலகோர் துன்பம் நீக்கி காக்க
   பரோபகாரம் எனும் உயர் ஞானம் அருளுகின்ற அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அரளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் மார்கழி மாதம் 20 ம் நாள் 04.01.2023, புதன்கிழமை)
   வரங்களாக அரங்கன் உமக்கு நித்தம்நித்தம்
   வடிவேலன் யான் சக்தி தனை வழங்கி வர
3. வருகவே அரங்கன் உன் அவதாரம்
   வையகத்தை பாதுகாத்து வழிநடத்தும்
   தருகின்ற அரங்கன் உன் தர்மமே
   தரணியில் பசிபிணி விரட்டி இந்த உலகை இடர்களின்றி பாதுகாக்கும்
4. ஆகவே அரங்கன் சொல் செயல் அனைத்தும் வேதமாக்கப்பட்டு
   வரங்களாக அதை பெற்ற தொண்டர் படைகள் மூலமே
   வையகத்துக்கு ஞானம் பரிபூரணமாய் பெருகி
   பெருகியே உலகவான்கள் எல்லாம் பிசகின்றி அரங்கனால் ஞானவான்களாகி
5. ஆகியே இந்த உலகம் ஆற்றல்மிக்க ஞானத் தலைமை கொண்ட
   ஆளுமையிலும் ஞான ஆட்சிகள் நிரம்ப வருமுலகில் ஆறுமுகன் என் தலைமை கொண்ட
   அற்புதமான மக்களை பாதுகாக்கும் உயர் ஞான ஆட்சியாக மாற்றம் பெறும்
   ஆகவே அரங்கனை தொடர்ந்து உலகோர் வர இந்த அற்புதத்தை உலகம் கண்டு
6. கண்டுமே எவ்வித இன்னலுமின்றி கலித்துன்பம் என்கின்ற பேரிடர்
   உயிர்பலி துன்பங்கள் இல்லாதவண்ணம் இன்பமுற மக்களுக்கு உயர் பாதுகாப்புக்கும்
   உயிர் பாதுகாப்பும் இனி பிறவாத பெரும்பேறு என்கின்ற உயர்நிலையும் கூடி அரங்கன் சக்திவழி
   உலகோர் அழியாமை பெற்று ஞான ஆட்சி படைக்க நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–